பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3.50

சுடர்: 5 பிரமோதூத ஸூ ஐப்பசி மீ 13 உ. செவ்வாய்க்கிழமை (30 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 10 கதிர்: 237

# யாழ்நகர இறங்குதுறைகளில் பொருள்களை இறக்க ஏற்பாடு

## வெள்ளியன்று முதற் கப்பல் வரும்

யாழ்ப்பாணம், அக். 30

யாழ். குடாநாட்டிற்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களை யாழ் நகரப் பகுதிக்கு வெளியேயுள்ள கடல் பகுதியில் நிறுத்தி அங்கிருந்து யாழ்நகர் இறங்குதுறைகள் ஊடாக பொருள்களை இறக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

அனேகமாக எதிர்வரும் வெள்ளியன்று முதலாவது கப்பல் பொருள்களை இறக்குவதற்காக யாழ் நகரக் கடலோரத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது குடாநாட்டிற்கு உணவுப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்கள் பருத்தித்துறைக் கடலிலேயே தரித்து நின்று பொருள்களை இறக்குகின்றன.

காலநிலை சீர் இல்லாததால் அங்கு பொருள்களை வேகமாக இறக்க முடியவில்லை என்றும்—

அதனால் ஏற்படும் நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே யாழ் நகரக் கடலோரத்தில் வைத்து பொருள்களை இறக்க முயற்சி எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளியன்று சிகிரியா கப்பலில் இருந்து யாழ் நகர இறங்கு துறைகள் ஊடாகப் பொருள்கள் இறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது பருத்தித்துறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று வந்த கப்பலில் இலங்கை வங்கிக்குப் பணம்

யாழ்ப்பாணம், அக். 30

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'சிகிரியா' கப்பலில் இலங்கை வங்கிக்கு பணமும் வந்துள்ளது.

கொழும்பில் இருந்து இலங்கை வங்கி அதிகாரிகளால் கொண்டுவரப்பட்ட பணம் நேற்று யாழ். இலங்கை வங்கி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

முதற்கட்டமாக வந்துள்ள 50 லட்சம் ரூபாவுடன், தொடர்ந்தும் பணம் வரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் வங்கிக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட பணம் நேற்றைய கப்பலில் வரவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (ஒ 3-6)

## ஆஸ்பத்திரியை மீளத்திறக்க ஆரம்ப வேலை தொடங்கியது

யாழ். போதனா ஆஸ்பத்திரியை மீளத் திறப்பதற்கான ஆரம்ப வேலைகள் நேற்றுத் தொடங்கின.

பாதுகாப்பு வலய எல்லைகளைக் குறிக்கும் விளக்குகள் பொருத்தும் வேலைகள், அடையாளங்களைக் குறிக்கும் விளம்பரப் பலகை தயாரிக்கும் வேலைகள் என்பன நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இவ் வேலைகளில் ஈடுபட்டனர். (இ 3)

## வடக்கு நோக்கி வந்த லொறி புத்தளத்தில் தீக்கிரை

வடபகுதிக்கு உணவுப் பொருள்களுடன் வந்தலொறி ஒன்று கடந்த சனிக்கிழமை புத்தளத்தில்வைத்து தீக்கிரையாக்கப்பட்டதாக அறிய வருகிறது.

ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் லொறி தடுத்து நிறுத்தப்பட்டு, அதில் இருந்த பொருள்கள் அனைத்தும் இறக்கப்பட்ட பின்னரே தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

அங்கிருந்து வந்த ஏனைய லொறிக்காரர்கள் இந்தத் தகவல்களைத் தெரிவித்தனர்.

லொறியின் சாரதிக்கும், கிளீனருக்கும் என்ன நடந்தது என்பதும் தெரியவில்லை. (ஒ 15)

## முல்லைத்தீவில் தாக்குதல்; சிப்பாய் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், அக். 30

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து மாதிரிக்கிராமத்தை நோக்கி இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது அவர்களை நோக்கி விடுதலைப் புலிகள் குறிபார்த்துசுட்டனர் அதில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன.

இந்தத்தாக்குதலை அடுத்து முகாமுக்குள் பின்வாங்கிய இராணுவத்தினர் அங்கிருந்து சிலாவத்தைப் பக்கமாக நடத்திய தாக்குதலில் 12 வீடுகள் சேதமடைந்தன என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன [உ]

## இன்று "பூகம்பம்" வெடிக்கலாம்! அயோத்தியில் மட்டும் 2 லட்சம் துருப்புக்கள்!

புதுடில்லி, அக். 30

இந்தியாவின் மதச்சார்பின்மைக் கொள்கைக்குச் சவாலாக அமைந்துள்ளதாகக் கருதப்படும் ராமர் ஆலயம் கட்டும் பணியை இன்று அயோத்தியில் ஆரம்பிக்க உள்ளதாக விஸ்வ ஹிந்து பரிஷத்தும், பாரதிய ஜனதாக் கட்சியினரும் விடாப்பிடியாக உள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஏற்படவுள்ள நெருக்கடி எதனையும் சமாளிக்கக்கூடிய தயார் நிலையில் உத்தரப் பிரதேச மாநில அரசு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் தாக்குதல்! இராணுவ ஜீப், பவள் சேதம்!!

யாழ்ப்பாணம், அக் 30

கடந்த ஞாயிறன்று காலை செங்கலடி இராணுவ முகாமிலிருந்து ஒரு ஜீப், ஒரு பவள் கவச வாகனம் ஆகியவை சகிதம் கால்நடையாக வெளியேறிய இராணுவத்தினர் மீது வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தடியில் வைத்து விடுதலைப் புலிகள் 'கால்கஸ்ரோ' தாக்குதல் நடத்தினர்

இந்தத் தாக்குதலில் ஜீப்பும், பவள் கவச வாகனமும் சேதமடைந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன

தாக்குதலுக்கு இலக்கான இராணுவத்தினருக்கு உதவுவதற்காக முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் இருந்து இரு பவள் கவச வாகனங்கள், ஒரு டிரக் ஆகியவற்றில் வந்த இராணுவத்தினர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் —

இந்தத் தாக்குதலின் சேத விவரங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன

பிரஸ்தாப தாக்குதல் நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் கண்ணன் (செல்லையா உதயன்), பிருந்தன் (செங்கலடி), சங்கர் [படுவான்கரை] ஆகியோர் வீர மரணமடைந்தனர். (உ)

## அடிக்கடி பறந்த ஹெலிகள்!

யாழ்ப்பாணம், அக். 30

யாழ். நகரின் சில பகுதிகளுக்கு மேலாக நேற்று அடுத்தடுத்து ஹெலிகள் பறந்த வண்ணம் இருந்தன.

குருநகர் கடல் பகுதிக்கு மேலாக பூநகரி, மன்னார் பக்கமாக ஒரே சமயத்தில் மூன்று ஹெலிகளும் கூட ஒன்றாகப் பறந்து சென்றதை அவதானிக்கமுடிந்தது. ஊர்காவற்றுறை முகாமிலும் ஹெலிகள் தரையிறங்கிச் சென்றன. (ஓ)

### செய்திச் சாரம்

## தபால் பொதிகள் வந்தன!

பருத்தித்துறைக்கு நேற்று வந்த 'சிகிரியா' கப்பலில் யாழ் மாவட்டத்துக்குரிய 162 தபால் பொதிகளும் வந்துள்ளன. (ஒ-3)

## மோதல்கள்

காங்கேசன்துறை, அக். 30

மாவிட்டபுரம் வயாவிளான் பகுதிகளில் இருந்து நேற்றும் படையினர் பல தடவைகள் வெளியேற முயன்றனர்.

அந்த வேளைகளில் விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல்களை நடத்தினர்.

இதனால் படையினரின் முயற்சி கைகூடவில்லை. [ஒ-3-68]

## 6 படையினர் காயம்

கொழும்பு. அக். 30

வந்தாறுமூலையில் ரோந்து சென்ற ஆயுதப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 6 படையினர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி மானிப்பாய்க்கு

யாழ்ப்பாணம், அக். 30

யாழ். போதனா ஆஸ்பத்திரி யாழ் நகருக்கு மாற்றப்பட்ட பின்னர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையை மானிப்பாயில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை தற்சமயம் மூடப்பட்டு, சங்கானையில் தற்காலிகமாக இயங்கி வருகிறது என்பது தெரிந்ததே. (ஒ-3)

## ஆஸ்பத்திரிக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம், அக் 30

யாழ். ஆஸ்பத்திரிக்கு நேற்று யாழ் மாநகர சபை மின்சார விநியோகத்தை வழங்கியது.

மின்சாரம் வழங்கப்பட்டதை அடுத்து ஆஸ்பத்திரியில் ''வெல்டிங்'' திருத்த வேலைகள் மும்முரமாக ஆரம்பமாகி உள்ளன. [ஒ 15]

## வாஜ்பாய் கைதானார்

பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அடல் பிஹாரி வாஜ்பாயும் நேற்றிரவு லக்னோவில் கைது செய்யப்பட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

9X9 ஸ்ரீல் சுருக்கு கடைச் சேற்களும், வீட்டுக் கதவுகள், யன்னல்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 7, கைலாசபிள்ளையார் கோவில் பின்வீதி, நல்லூர். (14572)

### வாசகர்களுக்கு நன்றி

மீரா வெளியீடுகளுக்கு நல்லாதரவு வழங்கி வரும் வாசகர்கள் அனைவருக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம். மீரா நாவல்கள் பற்றிய விமர்சனங்களை, ஆலோசனைகளை எழுதுங்கள் மீரா வெளியீட்டகம், 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (14559)

### வாங்கலாம், விற்கலாம்

தினமும் திறந்திருக்கும். பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். Senathirajah, Second Hand Book House, 13/6, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி முன்வேன், யாழ்ப்பாணம். [14577]

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பின் வேலைக்கும் Fudo Enterprises பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva Studio அருகாமையில். (சி-5219)

### சேவை

தெளிவான போட்டோ கொப்பி, றோனியோ தட்டச்சு, வேலைகளுக்கு காலை 9மணி முதல் மாலை 5 மணி வரை சண்முகம் ஏறட்ஸ் இல. 65 (185) பிரதான வீதி, யாழ்ப்பாணம். [14556]

### தவறிவிட்டது

சங்கரப்பிள்ளை அமுதலிங்கம் சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் என்பவரது அடையாள அட்டையும், வாகன அனுமதிப்பத்திரமும் பூநகரி இறங்கு துறைக்கும், வாடியடிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் உதயன் அலுவலகத்திலோ மேற்குறிப்பிட்ட முகவரியிலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (14594)

## மக்கள் பதற்றம்

சாவகச்சேரி, அக். 30

இரண்டுநாள் இடைவெளியின்பின் கடந்த சனிக்கிழமை பொம்மரும், ஹெலியும் சாவகச்சேரியை வட்டமிட மக்கள் பதற்றம் அடைந்தனர். (இ-31)

## மருத்துவ பீட மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 30

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று சமீபத்தில் மருத்துவ பீடத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மருத்துவ பீட மாணவர்கள் எதிர்நோக்கும் நடைமுறை ரீதியான சிக்கல்கள், வெளிமாவட்ட மாணவர்கள் சம்பந்தமான பிரச்சினைகள், மருத்துவ பீட மாணவர்களுக்கான பரீட்சைகள், கிளினிக்குகள் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டது. (இ-6)

## சாந்தாராம் காலமானார்

புதுடில்லி, அக். 30

இந்திய திரைப்படத்துறையில் ஜாம்பவானாகவிளங்கிய டைரக்டர் வி. சாந்தாராம் தனது 90 ஆவது வயதில் காலமானார். (இ-எ)

## அரையாண்டு நினைவஞ்சலி



மட்டுவில் தெற்கு

**சுப்பிரமணியம் கணேசலிங்கம்**

B. A. (Hons)

(நன்நடத்தை அதிகாரி வவுனியா)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 27 - 10 - 1953 | 30 - 04 - 1990 |

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்காத உங்கள் நினைவுகள்
நிழல்களாகி எம்மைத் தொடர்கின்றன.
கழிந்துவிட்டது அரையாண்டெனினும்
எம் கண்ணீர் வெள்ளம் குறையவில்லை
எமை மறந்து எங்கேதான் சென்றீர்களோ?
நல்லவர்க்கு இவ்வுலகில்
வாழ்க்கை இல்லையென எண்ணி
நிலையான வாழ்க்கை தேடிச் சென்றதேனோ?

அன்பு மனைவி, பெற்றார்,
மாமன், மாமி,
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மருமக்கள், பெறாமக்கள்.

''கமலட வனம்''
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. [14584]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. வயிரமுத்து தம்பிராஜா**

(தம்பிராசா மாஸ்ரர்-இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 03 - 08 - 1912 | 30 - 09 - 1990 |

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து, எங்களையெல்லாம் உயர்நிலைக்கு ஆளாக்கிய எங்கள் அன்பு அப்பா! நீங்கள் எங்களைப் பிரிந்து 31 நாட்கள் சென்றாலும் எம் நெஞ்சங்களில் பதிந்த உங்கள் அன்பு நினைவுகள் என்றுமே அழியாது.

எம் அன்பு அப்பா காலமாகிய வேளை, நேரில் வருகை தந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், எமது ஆழ்ந்த துயரத்தில் பங்கு கொண்டும், நெருக்கடியான சூழல் நிலவும் இக்கால கட்டத்திலும் இறுதிக் கிரியைகள் குறைவரநிறைவேறப் பலவழிகளிலும் உதவி நல்கிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியறி தலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அத்துடன் இன்று (30 - 10 - 1990) எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக்கிரிகைகளிலும் (அதிகாலை), மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'தேவி நிலையம்'
இமையாணன்,
உடுப்பிட்டி. (14571)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவளத்துணை நிலையம்

## இடமாற்றம்

21, முதலாம் குறுக்குத்தெருவில் இயங்கிய உளவளத்துணை நிலையம் ''சாந்திகம்'' தற்பொழுது இல. 15 கச்சேரி நல்லூர் வீதி (சுண்டிக்குளி அஞ்சல் நிலையத்திற்கு அருகாமையில்) என்னும் முகவரியில் 01-11-1990 தொடக்கம் தினசரி காலை 9 மணியில் இருந்து நண்பகல் வரை இயங்கும் என்பதை அறியத் தருகின்றேன்.

தலைவர்.

(14590)

## தசாக அழைப்பிதழ்

பிரம்மஸ்ரீ

**கி. நாராயண சாஸ்திரிகள்**

(கோண்டாவில்)

பிரமோதூதஸு ஐப்பசிமீ 05 ம் நாள் [22-10-90) மாலை சிவபதமடைந்த பிரம்மஸ்ரீ கி. நாராயண சாஸ்திரி அவர்களின் அந்திமக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

31 - 10 - 90 புதன்கிழமை காலை 10 மணி தசாகம்
01 - 11 - 90 வியாழக்கிழமை ஏகோதிஷ்டம் -மாசிகம்
02 - 11 - 90 வெள்ளிக்கிழமை சபிண்டீகரணம்
03 - 11 - 90 சனிக்கிழமை கிரகயக்ஞம் சமாராதனை

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (14589)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

30 - 10 - 1986 வியாழக்கிழமையன்று நடைபெற்ற கோட்டை இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் அகால மரணமான
எம் அன்புச் செல்வம்

**பொன்னம்பலம் விபுலானந்தன்**

(யாழ்/மத்திய கல்லூரி மாணவ தலைவன்)

| தாயின் மடியில்: | தாயக மடியில்: |
|---|---|
| 22 11 - 1969 | 30 - 10 - 1986 |

''எங்கள் விழி நீரில் நீ''

உமது நினைவால் துயருறும்!

அப்பா, அம்மா,
சகோதரர், சகோதரி, அண்ணிமார்,
உறவினர், நண்பர்கள்.

64, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம். [14591]

உ
சிவமயம்

## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



காலஞ்சென்ற

**திருமதி சின்னத்தங்கம் இராசா**

அவர்களின்

அந்தியேட்டி: இன்று துண்டி தீர்த்தக் கரையிலும்.

வீட்டுக்கிருத்தியம்: நாளை காலை 9.30 மணியளவில் திருநெல்வேலி இல்லத்திலும் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, அம்மையாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர் நண்பர்களைப் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

பொன். சுந்தரலிங்கம்,
ரஞ்சனா சுந்தரலிங்கம்.

கேணியடி,
திருநெல்வேலி. [14555]

## உதயன்

### வாபஸ் பெறுக!

குடாநாட்டில் ஒரு சில நாட்களாகச் சற்று மழுங்கி இருந்த விமானத்தாக்குதல்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கூர்மையாக்கப்பட்டன; தீவிரமடைந்தன; பெரும் மூச்சுடன் முடுக்கிவிடப்பட்டன.

யுத்தத்தைத் தொடர்வதற்குப் பணத்துக்கு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்த அரசுக்கு, உலக வங்கியின் உந்துதலில் "உதவி வழங்கும் நாடுகள் குழு" கேட்டதை விட அதிக பணம் வழங்கியதால் ஏற்பட்ட எக்காளமே ஞாயிறு விமானத் தாக்குதல்களில் தெரிந்தது எனலாம்.

முதல்நாள் சனிக்கிழமை பலாலிக்கு வந்த அமைச்சர் ரஞ்சன், அங்கு படையினர் மத்தியில் வெளியிட்ட தகவல்கள், தாக்குதல் திட்டங்கள் என்பன பணம் கிடைத்ததின் திமிரையே எடுத்தியம்பின.

உதவி வழங்கும் நாடுகளின் பாரீஸ் மாநாட்டில் தம்மை நோக்கி ஏவப்பட்ட அம்புகளை ஒருவாறு தாங்கிக்கொண்டு, இனிமேல் ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் பேணப்படும் என்று பணிந்துரைத்து, பல்லிளித்துப்பணம்பெற்றார் பிரதமர் விஜேதுங்கா. அவர் கால் வைத்த இரண்டு நாட்களிலேயே, அரசபடைகள் தமது வெறியாட்டத்தைத் தொடங்கிவிட்டன; பார்த்தீர்களா!

மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளில், ஆலயங்கள் - பாடசாலைகள்- ஆஸ்பத்திரிகள்- சந்தைகள் போன்ற மக்கள் கூடும் பகுதிகளில் விமானத் தாக்குதல் நடத்தி பொதுமக்களை, நிராயுதபாணிகளைக் கொல்லுதல் மனித உரிமை மீறலின் மிக உச்சப்படி!

இப்போது மழை காலம். மக்கள் தங்கள் உயிர்களைக் காப்பற்ற இதுவரை உதவிய பதுங்குகுழிகளுக்குள் நீர் புகுந்து விட்டது. அதனால் திக்கற்றவர்களாக இருக்கும் மக்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்துவது வேண்டுமென்றே, தெரிந்து கொண்டே மனித உரிமைகளை மீறுவதாகும்.

யுத்தத்தின் நடுவில் சிக்குண்டு பொதுமக்கள் இறப்பது தவிர்க்க முடியாதது என்று அமைச்சர் ரஞ்சன் இடைக்கிடை கூறி வருகிறார். அதாவது விமான, கடற்படை, தரைத் தாக்குதல்களில் பொதுமக்கள் பலி கொள்ளப்படுகிறார்கள் என்பதை, அவர் அதன் மூலம் ஊர்ஜிதம் செய்கிறார்; ஒப்புக்கொள்கிறார்!

யுத்தத்தின் இடையில் அகப்படும் பொதுமக்களைக் கொல்வது எங்கும் நியாயப்படுத்தப் படவில்லை. சர்வதேச போர் விதிகள் அதற்கு விதிவிலக்குத் தரவுமில்லை. ஆகவே அது பெரும் மனித உரிமை மீறலாகும்.

தமது நாட்டில் இனிமேல் மனித உரிமைகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஸ்ரீலங்கா பிரதமர் கூறியதை நம்பி, 16 நாடுகளும் பண உதவி வழங்கின. இரண்டு நாட்களிலேயே அந்த உறுதிமொழியை ஸ்ரீலங்கா மீறிவிட்டது. ஆகையால் நியாயப்படி அந்த நாடுகள், தமது உதவியை வாபஸ் பெற வேண்டும். அவை அப்படிச் செய்யுமா? அல்லது பொய் சொல்லி, ஏமாற்றித் தம்மிடம் பண உதவி பெறலாம் என்பதை நிலை நாட்டப் போகின்றனவா?

# பொத்துவில் பகுதி தமிழ் குடும்பங்கள் மீண்டும் அகதி முகாம்களில் தஞ்சம்

## வீடுகள் பல தீ வைத்து நாசம்

மட்டக்களப்பு, அக். 30

கோமாரி மெதடிஸ்த தேவாலயத்தில் தங்கி இருந்து கடந்த வாரம் தமது சொந்த இருப்பிடங்களுக்குத்திரும்பிய பொத்துவில் தமிழ் அகதிகள் அச்சம் காரணமாக மீண்டும் அகதி முகாம் திரும்பி உள்ளனர்.

இவர்களது வீடுகள் பல நாசமாக்கப்பட்டுள்ளன.

அங்கு பதற்றநிலை ஏற்பட்டதை அடுத்து பொலீஸாரும் அதிரடிப் படையினரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொத்துவில் பகுதியைச் சேர்ந்த 3015 பேர் தற்போது கோமாரி மெதடிஸ்த தேவாலயத்தில் அகதிகளாக இருந்து வருகின்றனர்.

பொத்துவில் 3 ஆம் குறிச்சி குண்டுமடு, இன்ஸ்பெக்டர் ஏத்தம், ஆலடிப்பிள்ளையார் ஆகிய பகுதிகளிலேயே தமிழ் மக்கள் பெரும் அளவில் வாழ்ந்து வந்தனர். (இ)

### பூசை நடத்த ஏற்பாடு

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் வழமை போல் பூசைகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அங்கு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த ஆலய திருப்பணி சபையினரும் ஆலய குருமார்களும் அங்கு திரும்பியுள்ளனர். (இ-3)

## மண்டைதீவு மருத்துவமனை; மீண்டும் விரைவில் இயங்கும்

அனலைதீவு, அக். 30

இராணுவத்தினரால் சேதப்படுத்தப்பட்ட மண்டைதீவு அரசினர் மருத்துவமனையை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கடந்த வாரம் அங்கு சென்று நிலைமையை அவதானித்துள்ளார்.

வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகளைப் பெறுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் சேதமதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை—

இத்தீவு மக்களின் அவசர உணவுத் தேவையை நிவர்த்தி செய்ய கிராம சேவையாளர் திரு. சுந்தரராசன் நடவடிக்கை எடுத்துள்ளார். [ஒ-18]

### முல்லைத்தீவில்

## போசாக்கு மருத்துவ வசதி இன்றி கர்ப்பிணிகள் பாதிப்பு

மாங்குளம், அக். 30

முல்லைத்தீவில் உரிய போசாக்கு உணவு, சுகாதார அறிவுரைகள், மருத்துவ வசதிகள் இல்லாததால் கர்ப்பிணித் தாய்மார் பாதிப்படைகின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளால் வைத்தியசாலைகள் சீராக இயங்காததே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

பல கர்ப்பிணிப்பெண்கள் பிரசவ நேரத்தில் உயிருக்கு போராடும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிறக்கும் சிசுக்களுக்கு உடன் தகுந்த மருத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் சிசுக்கள் இறக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. (இ-94)

## மன்னார் செயலகத்தை நகருக்கு மாற்ற ஏற்பாடு

மன்னார், அக். 30

மன்னார் செயலகத்தை, அது முன்னர் நகரில் இயங்கிய இடத்திற்கு மாற்ற உள்ளதாக அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் தெரிவித்தார்.

நகரத்தில் ஏற்பட்ட இராணுவத் தாக்குதல்களையும், பதற்ற நிலையையும் தொடர்ந்து செயலகம் இப்போது "சனிவிலேஜ்" பகுதியிலேயே இயங்கி வருகிறது.

அதனைப் பழைய இடத்திற்கு மாற்றுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். [அ]

## 350 அமைய ஊழியர்கள் மட்டக்களப்பில் வேலை இழப்பு

மட்டக்களப்பு மாவட்ட அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சிசபைகள் ஆகியவற்றில் பணிபுரிந்த சுமார் 350 அமைய ஊழியர்கள் கடந்த நான்கு மாதகாலமாக வேலைகளை இழந்த நிலையில் உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்தே இந்த அமைய ஊழியர்கள் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாநகரசபை, இ. போ. ச. கட்டடத் திணைக்களம், மற்றும் காத்தான்குடி, ஏறாவூர் பிரதேச சபைகள் ஆகியவற்றில் சடமையாற்றிய ஊழியர்களே வேலை இழந்துள்ளனர். (இ - 6)

## மின்வலு திடீரென அதிகரிக்க மின்சாதனம் எரிந்து நாசம்

மின்சார வலு திடீர் என அதிகரித்த போது பல்புகள் வெடித்துச் சிதறின. வயர்கள் எரிந்தன வீடுகளில் இருந்த ரி. வி. ரேடியோ, மோட்டர் போன்றவை பழுதடைந்தன.

கடந்த வியாழக்கிழமை நவாலியில் இச்சம்பவம் நடந்தது. (இ - 100)

# உயிரோட்டமிகு ஓவியங்களால் இதயங்களைத் தொட்ட "வீகே"

## அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது

உதயன் வெளியீடுகளின் பிரதம ஓவியரான "ஓவிய மாமணி" வீகே காலமானார் என்ற செய்தியை நம்ப முடியவில்லை. கொழும்பிலிருந்து வந்த அந்தத் தகவல் சரியாக இருக்குமா என்று நம்ப மறுத்தபோது, தம்மைப் பீடித்த நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காகவே அவர் அங்கு சென்றார் என்ற உண்மை மனதில் தோன்றி நெஞ்சைக் கனக்கச் செய்தது.

இருபத்திநான்கு வருடங்களுக்கு முன்னர் கண்ட ஓவியர் "வீகே" மன கண்முன் நிழலாடுகிறார். சிரித்த முகம் எவருடனும் இனிமையாகப் பழகும் சுபாவம், ஒரு கம்பீரமான தொங்கல் நடை. தூய தமிழ் தேசிய உடையில் எளிமையான தோற்றம். ஆரம்பித்த ஓவியத்தை முடித்து விடும்வரை அதிலேயே புலனையும் திறனையும் செலுத்தும் ஆழ்ந்த கூர்மை. அத்தனை வருட அனுபவத்தின் பின்னரும் எவரும் சுட்டிக்காட்டும் சிறு குறைபாடுகளை ஏற்றுக்கொண்டு அவற்றைத் திருத்தி ஓவியத்துக்கு மேலும் மெருக்கூட்ட நினைக்கும் பெருந்தன்மை; உண்மையான கலைத்துவம்; கலை உணர்வு இத்தனையும் நிறைந்து சேர்ந்து ஒரு முழுமையான ஓவியக் கலைஞனாக 'வீகே' திகழ்ந்தார்.

கொழும்பில் பத்திரிகை அலுவலகத்தில் உதவி ஆசிரியராகச் சேர்ந்த தம்மிடம் இருந்த கலைத்திறனைக் கண்டு பிடித்த பத்திரிகையின் ஆசிரியரே, தம்மை ஓர் ஓவியராக மாற்றியவர் என்று ஓவியமாமணி அடிக்கடி நினைவு கூர்வார்.

செய்வன திருந்தச் செய் என்பதிலிருந்து ஒரு படி உயர்ந்து, ஓவியங்கள் தனது மனதுக்குத் திருப்தி தரும் வரை அவற்றை [illegible] முடிக்கும் பக்குவம் அவரது கலைச்சிறப்பு.

கொழும்பில் பணியாற்றுங்கால் அவர் பத்திரிகைக்கு மட்டுமன்றி பல நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றுக்கும் வண்ணமுறு, கலைநுட்பம் செறிந்த ஓவியங்களை வரைந்தார். அவரது ஓவியக் கலைத் திறமை (தெற்கின்) தலைநகரில் சுடர் விட்டுப் பிரகாசித்தது. அங்கு அவரது கலைத்திறமையைப் பாராட்டி, 'வர்ண வாரிதி' "ஓவிய மன்னர்" ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

நீண்ட காலமாக அங்கு தமிழ் ஓவியத்துறைக்குப் பணியாற்றிய திரு. விசுவலிங்கம் கனகலிங்கம், யாழ்ப்பாணம் வந்து தமது கலைச் சேவையைத் தொடர்ந்தார். அடக்கமும், கலைப்பக்தியும், அளவிடவொண்ணாத் திறமையும் உள்ள அவர் இங்கு வந்த சில வருடங்களிலேயே தமது ஓவியங்களால் புகழ் பெற்றார். வாடிக்கையாளர்கள் மட்டுமன்றி, ஓவிய ரசிகர்களும் அவரது வீடு தேடிச் செல்லுமளவுக்கு அவரது கலைத்திறமை கொடி கட்டிப் பறந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் உதயனுக்கு முகப்புத் தலைப் பெயர் வரைய வேண்டும் என முடிவு செய்ததும் "வீகே" யின் உதவியை நாடினோம். அவரின் முத்தான எழுத்துக்களில் உதயன் இப்போது உயர்ந்து நிற்கிறான். தொடர்ந்து சஞ்சீவி, அர்ச்சனா, ஞானக்கதிர், ஜோதிட ஜோதி ஆகிய உதயன் வெளியீடுகள் [illegible] சகல வெளியீடுகளுக்கும் முகப்புத் தலைப் பெயர் வரைந்தவர் திரு. "வீகே" அவர்களே.

இதற்கு முன்னர் வீரகேசரி, தினபதி ஆகிய கொழும்புப் பத்திரிகைகளுக்கும் முகப்புத் தலைப் பெயர் வரைந்த பெருமையும் அவரையே சாரும்.

இலக்கியக் காட்சிகளையும் இதிகாச தத்துவங்களையும் தத்ரூபமாக ஓவியமாக்கும் 'வீகே'யின் திறமையே அபாரம். உதயன், சஞ்சீவி சிறப்பு



மலர்களில் வெளிவந்தகலைத்துவம் செறிந்த அவரது ஓவியங்களும் அர்ச்சனா, ஞானக்கதிர்சஞ்சிகைகளின் பலவர்ண முகப்புப் படங்களும் அவற்றின் வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை. அவர் வரையும் சுவாமிப் படங்கள் தெய்வாம்சம் மிளிர்பவை, மனதில் பக்தியை மூட்டுபவை.

வித்துவக் காய்ச்சல் சிறிதும் இல்லாமல் ஏனைய கலைஞர்களை மதித்து நடந்து கலைஞர்களின் நன்மதிப்பைப் பெற்றவர் "வீகே"

தமது கை வண்ணத்தால், மை வர்ணத்துக்கு மெருகூட்டிய ஓவியமாமணி அவர்.

ஓவியத்துறையில் ஐம்பது வருடங்கள் பூர்த்தி செய்தமையை ஒட்டி, அவருக்கு கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பில் அவரது ரசிகர்களும், சக கலைஞர்களும் பொன்விழா நடத்தினர்.

அவர் சுகம்பெற்று யாழ்ப்பாணம் வந்ததும் உதயன் சார்பில் ஒரு பாராட்டு விழா நடத்தவேண்டும் என்ற எண்ணத்தில் மண்ணைத் தாவுவது போல அவரது மரணச் செய்தி நேற்றுக் காலை எட்டிற்று.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஓவியத்துறையில் தமக்கென ஒரு தனிப்பணியை அமைத்து அதனைப் பின்பற்றி கலைஞர்களையும், சாமானியனையும் கவர்ந்த 'வீகே' தமது எழுபதாவது வயதில் புகழுடம்பு எய்திவிட்டார்.

அவரது உயிரோட்டமும், வனப்பும், கலைச் செறிவும் நுணுக்கமும் நிறைந்த வண்ணமிகு ஓவியங்கள் அவரது நினைவை கலாரசிகர்கள் நெஞ்சில் என்றும் பதித்து வைக்கும். அதற்கும் மேலாக, அவரது களங்கமில்லாத, குழந்தைத் தனம் மிளிரும் எளிமையான, இனிமையான சுபாவமும், சிறப்பான குணாம்சங்களும் அவரைத் தெரிந்தவர்களின் மனதிலிருந்துஅழியமாட்டா.

— மயூரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சிகிரியா' கப்பலில் நேற்று உணவும் மருந்தும் வந்தன!

ஆயிரத்து 700 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன் 'சிகிரியா' என்ற கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது.

உணவுப் பொருள்களுடன் விசர் நாய்க்கடிக்கான ஆயிரத்து 200 தடுப்பு ஊசிகளும், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான நோய்த் தடுப்பூசி மருந்துகளும் இந்தக் கப்பலில் வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்திற்கு இதுவரை விசர் நாய்க்கடித் தடுப்பு ஊசி மருந்து 300 சி. சியே அனுப்பப்படுவது உண்டு. ஆனால் இம்முறை 3,600 சி சி. அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவந்தது. [ஓ-15-3]

## நிரந்தர வதிவிடங்களில் மட்டுமே நிவாரணப் பெர்மிட்

யாழ்ப்பாணம், அக் 30

நிவாரணம் பெறுவதற்கான நிரந்தர பெர்மிட்டுகளை மக்கள் தாம் நிரந்தரமாக வசிக்கும் பகுதி உதவி அரசாங்க அதிபர்களிடமிருந்தே பெற வேண்டும்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் மேற்கண்டதகவலைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 4ஆம் கட்ட நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதனால் மக்கள் தமது நிரந்தர வதிவிட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கிராமசேவையாளர்கள் மூலம் இந்தப்பெர்மிட்டுகளைப் பெறவேண்டும்- என்றும் அவர் தெரிவித்தார்.

நிரந்தர பெர்மிட்டுகளைத் துரிதமாக விநியோகிக்கும் பொருட்டு சகல உதவி அரசாங்க அதிபர்களும் புள்ளி விபரங்களுடன் எதிர்வரும் இரண்டாம் திகதி செயலகத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-3)

## பெக்கருக்கு 11 லட்சம் டாலர்

உலக டெனிஸ் போட்டி ஒன்றில் பொரிஸ் பெக்கர், ஸ்டீபன் எட்பேர்க்கைத் தோற்கடித்து 11 லட்சம் டாலர் பரிசுப்பணத்தைப் பெற்றார். (ஒ-எ)

## பாக். புதிய பிரதமர் பதவிக்கு யத்தோயி - ஷரீப் போட்டி

இஸ்லாமபாத், அக். 30

பாகிஸ்தானின் புதிய பிரதமராக வருவது யார் என்பதில் இஸ்லாமிய ஜனநாயக அணிக்குள் பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது.

புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காக கடந்த புதன் நடந்த பொதுத் தேர்தலில் தெரிவான இஸ்லாமிய ஜனநாயக அணி எம். பிக்களின் கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெற உள்ளது.

காபந்து பிரதமராக உள்ள ஜனாப் குலாம் இஷாக் யத்தோயி, பஞ்சாப் மாகாண முன்னாள் முதலமைச்சர் நவாஸ் ஷரீப் ஆகியோர் பிரதமராக வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)


**Computer Programming**

**BASIC Language**

**புதிய பிரிவு**

ஆரம்பம்: 01-11-1990

நேரம்: 9.00 மணி

கட்டணம்: மாதம் 300/-

மேலும் விபரங்கட்கு:

**School of Business Administration**

16, 3rd Cross Street,

Jaffna.

[சி-5348]


## மரண அறிவித்தல்

அருட்சகோதரி

### திறினிற்றி ஆபரணம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும், இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலயத்தின் ஆசிரியருமாகிய அருட்சகோதரி திறினிற்றி அவர்கள் 29 - 10 - 90 திங்கட்கிழமையன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் 30 - 10 - 90 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும். இவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மாகாணத் தலைவி,
திருக்குடும்ப மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம். [14593]

## இதுவரை திரும்பாதோர் 72 பேர்!

காங்கேசன்துறை, அக். 30

இராணுவம் நிலைகொண்டுள்ள காங்கேசன் துறை, தையிட்டிப் பகுதிகளில் சிக்கி இதுவரை திரும்பி வராதவர்களின் எண்ணிக்கை 72 ஆக உயர்ந்துள்ளது.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க தகவல் நிலையத்தில் நேற்று மாலை வரை கணக்கிடப்பட்ட பதிவுகளில் இருந்து இது தெரிய வந்தது. [ஓ 3-68]

## தெல்லிப்பழை உ. அ. அதிபர் உடுவிலில்

யாழ்ப்பாணம், அக். 30

வலி. வடக்கில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் தெல்லிப்பழை உதவி அரச அதிபர் அலுவலகம், உடுவில் உ. அ. அ. பணிமனையில் தற்காலிகமாக இயங்குகிறது.

இந்தப் பணிமனைக்கு அருகிலுள்ள பாடசாலையில் இடம்பெயர்ந்த கிராமசேவையாளர்கள் கடமையாற்றுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கும் தற்காலிக உ. அ. அலுவலகத்திலும் நிவாரணம் சம்பந்தமான அலுவல்கள் கவனிக்கப்படும். (ஓ)

## இரண்டாம்தர அதிபர்களுக்கு நியமனக்கடிதம்

யாழ்ப்பாணம், அக். 30

யாழ். மாவட்டத்தில் பணிபுரிவதற்கு இரண்டாம் தர அதிபர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 93 பேருக்காக நியமனக் கடிதங்கள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டன.

நியமனக் கடிதங்களைப் பெறுவதற்காக பெரும்பாலானோர் சமுகமளித்திருந்தனர். (இ-6)

## அனுராவுக்கு பிரேமா புதிய பதவி

கொழும்பு, அக். 30

பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த நிலையத் தலைவராக திரு. அனுரா பண்டாரநாயக்காவை, ஜனாதிபதி பிரேமதாஸா நியமித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சி எம் பியான திரு அனுரா பண்டாரநாயக்கா, எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து இப்பதவியை வகிப்பார். (ஒ-எ)

## பிரபல தயாரிப்பாளர் காலமானார்

சென்னை, அக். 30

கல்யாணப்பரிசு, அமரதீபம் ஆகிய தமிழ்த் திரைப்படங்களைத் தயாரித்த வீனஸ் கிருஷ்ணமூர்த்தி நேற்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 67. (ஒ எ)

## மின்தாக்கி மூவர் மரணம்

சென்னை, அக். 30

கடும் மழை காரணமாக சென்னை நகரில் மின்சாரம் தாக்கி மூன்று பேர் மரணமானார்கள்.

சைக்கிளில் சென்றுகொண்... [illegible] (ஒ-எ)

## தாக்குதல் பலவற்றுக்கு தலைமை ஏற்றவர் கண்ணன்

யாழ்ப்பாணம், அக். 30

கடந்த ஞாயிறன்று வந்தாறுமூலையில் பவள் கவச வாகனம் மற்றும் ஜீப்பில் வந்த படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது வீரமரணம் அடைந்த மேஜர் கண்ணன், ஸ்ரீலங்கா படையினருக்கு எதிரான பல தாக்குதல்களை முன்னின்று நடத்தியவர் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

1984 இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்த மேஜர் கண்ணன் இயக்க வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவர்.

அண்மையில் கல்முனையிலுள்ள ராணுவ முகாம் முற்றாக அழிக்கப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கு இவரே தலைமை வகித்தார். இந்தத் தாக்குதலில் பல படையினர் உயிரிழந்தனர்.

இந்தியப்படை, தமிழ்த் தேசிய இராணுவம் ஆகியவற்றுக்கு எதிராகவும் மேஜர் கண்ணன் தீரத்துடன் போராடினார்- இவ்வாறு விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### ஈமக்கிரியைச் செலவுக் கொடுப்பனவு

## சுற்று நிருபம் வந்தது; ஆனால் பணம் வரவில்லை!

யாழ்ப்பாணம், அக். 30

கடந்த ஜூன் 14 ஆம் திகதிக்குப் பின்னர், இராணுவ நடவடிக்கையால் இறந்தவர்களின் ஈமக்கிரியைச் செலவுக்காக இரண்டாயிரம் ரூபா வழங்க அரசு அனுமதி வழங்கி இருந்தது.

ஆனால் யாழ். செயலகத்துக்கு அந்தக் கொடுப்பனவுக்கான பணம் இன்னும் வந்து சேரவில்லை. அதன் காரணமாக பல விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன. இறந்தவர்களின் உறவினர்கள் நாளாந்தம் செயலகத்துக்குச் சென்று அலைகின்றனர்.

இறுதிக் கிரியைக்கான கொடுப்பனவை அவசர உதவியாக வழங்குமாறு புனர்வாழ்வு அமைச்சு சுற்றுநிருபம் மூலம் யாழ். செயலகத்துக்கு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## படையினர் காயம்

காங்கேசன்துறை சிமெந்து ஆலைப்பகுதியில் பொறி வெடிகளில் சிக்கி சிப்பாய்கள் சிலர் காயமடைந்தனர்.

### யாழ். நகர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் தரித்து நிற்கும் இந்தக் கப்பல், தீவுப் பகுதிக்குச் சென்று அப்பகுதிக்குரிய பொருள்களை இறக்கிவிட்டு, யாழ் நகரக் கடலோரத்துக்கு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

### அயோத்தியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அயோத்தி நகரிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் சுமார் 2 லட்சம் இராணுவத் துருப்புகள் நிலைகொண்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுமார் 65 ஆயிரம் பேர் வரையில் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அயோத்தியில் வன்முறைப் பூகம்பம் வெடிக்கக்கூடும் என்று அவதானிகள் அச்சம் தெரிவித்தனர்.

## சிங் - மேனகா சந்திப்பு

புதுடில்லி, அக். 30

மத்திய அமைச்சரவையில் இருந்து ராஜினாமாச் செய்த திருமதி மேனகா காந்தியின் பதவி விலகல் கடிதத்தை பிரதமர் வி பி. சிங் இன்னமும் ஏற்கவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை —

திருமதி மேனகா காந்தி கடந்த ஞாயிறு பிரதமர் வி.பி. சிங்கை அவரது அலுவலகம் சென்று சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார். (ஒ-எ)

## செயற்கை வலதுகாலுக்கு தட்டுப்பாடு

கொழும்புத்துறை, அக். 30

யாழ் செயற்கைக்கால் பொருத்தும் ஜெய்ப்பூர் தொழிற்சாலையில் செயற்கை வலது காலுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இக்கால் பொருத்த வேண்டிய பலர் அது இங்கு வந்து சேரும் வரை பொறுத்திருக்க வேண்டியுள்ளது.

சடந்தகாலங்களில் பெரும்பாலானவர்கள் தமது வலது காலையே கூடுதலாக இழந்துள்ளனர் (இ - 30)

## மரண அறிவித்தல்

### கந்தையா கணேசபிள்ளை

[இளைப்பாறிய நிர்வாக அதிகாரி]

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர், சங்கிலியன் வீதியில் வசித்தவருமாகிய திரு கந்தையா கணேசபிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கனகாம்பிகையின் அன்புச் சகோதரரும், இந்திராணி (ஜேர்மனி), மகாராணி [மாவட்ட பதிவாளர், முல்லைத்தீவு], குமரேஸ்வரநாதன் (ஆசிரியர், யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), விக்கினேஸ்வரன் (ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி) ஆகியோரின் தந்தையாரும், இராசரத்தினம், சிவஞானவதி, நேசரஞ்சினி (ஆசிரியை, யா/செங்குந்தா இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமை மாமனாரும், கிரிதரன், சுஜந்தன், கேமாயினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-10-1990 இன்று மாலை 3-00 மணிக்கு நடைபெற்று பூவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

44/7, சங்கிலியன் வீதி,
யாழ்ப்பாணம்.

[14269]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம். நாவலர் வீதி 292/2 இல... கத்தில் உள்ள அச்சகத்தில் 30 - 10 - 1990 இல் அ... வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org